விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 17 ரபியுல் 30 இதழ் 295

யாழ்ப்பாணம் புதன்கிழமை 3-12-1986

இந்தியக் குடியுரிமை விவகாரம்:

# இலங்கை அரசுடன் ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படவில்லை - நட்வர்சிங்

[சென்னை]

இலங்கையிலுள்ள நாடற்ற இந்திய வம்சாவளித்தமிழர்களை இந்தியக் குடியுரிமை பெறத்தகுதியுள்ளவர்களாக ஆக்கும் வகையில் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்று இந்திய வெளி விவகார இணை அமைச்சர் திரு. நட்வர் ஸிங் நேற்று ராஜ்ய சபாவில் தெரிவித்தார்.

1964, 1974-ம் ஆண்டுகளின் ஒப்பந்தங்களின் அடிப்படையில் 1981-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொண்ட நாடற்ற இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க அரசு உறுதி கொண்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

வருங்காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்படுவோர் மலைத் தோட்டங்கள், விவசாயம், வாணிபம் போன்ற துறைகளில் உள்ள துறை அமைச்சு வகுத்துள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

★ யாழ். குடாநாட்டை மீண்டும் கைப்பற்ற

# இரு வாரத்தில் முப்படைத் தாக்குதல் நடத்த அரசு தயாராகிறது - பிரபா

(சென்னை)

"யாழ். குடாநாட்டுப் பகுதியை எங்களிடமிருந்து கைப்பற்ற இன்னும் இரண்டுவாரத்தில் கடுமையான தாக்குதல் நடத்தச் சிங்கள அரசு கருதியிருக்கிறது. ஆகாயம், கடல், தரை இப்படி மூன்றுவழிகளிலும் முப்படைத் தாக்குதல் நடத்தலாம்

இவ்வாறு 'தேவி' வாராந்த சஞ்சிகைக்குப் பேட்டியொன்றையளித்த தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இப்போது இஸ்ரேலிடமிருந்து மேலும் ஆயுதத்தப்படகுகளை வாங்கிக்கடற்பகுதியில் தங்களை வலிமைப்படுத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. அவர்களை எப்படிச் சமாளிப்பது என்பது எங்களுக்குத் தெரியும். எப்படி நொறுக்கித் தள்ளப்போகிறோம் என்பது ராணுவரகசியம். இதை மட்டுக்கேட்காதீர்கள்

என்னைப் பொறுத்தவரை நான் தமிழீழவிடுதலை இயக்கத்தலைவன். எனது நாட்டுக்காக

[5ம் பக்கம் பார்க்க]

● பஞ்சாப் நெருக்கடியால் சென்னை கொழும்புக்கான

# சிதம்பரம் குழுவினரின் விஜயம் ஒத்திவைப்பு

[கொழும்பு]

இனப்பிரச்னை தொடர்பாக தமிழ்ப் போராளிகளுடனும் இலங்கை அரசுடனும் பேச்சு நடத்தவென சென்னைக்கும் பின்னர் கொழும்புக்கும் வரவிருந்த இந்திய இணை அமைச்சர்களின் விஜயம் ஒத்திப்போடப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை நேற்றுக்காலை சந்தித்த இந்தியத் தூதர் திரு டிக்ஸித் இத்தகவலைத் தெரிவித்தார்.

மத்திய நிர்வாக சீர்திருத்தத்துறை உள்துறை, இணை அமைச்சர் திரு ப சிதம்பரமும், வெளியுறவு இணையமைச்சர் நட்வார்சிங்கும் நேற்று சென்னை சென்று போராளிகளைச் சந்திக்கவிருந்தது தெரிந்ததே.

ஆயினும் தற்போது பஞ்சாப் மாநிலத்தில் எழுந்துள்ள நெருக்கடி நிலைகாரணமாக இவ்விருவரும் புதுடில்லியில் கட்டாயமாக இருக்க வேண்டுமென்பதாலேயே சென்னை, கொழும்பு விஜயங்கள் பின்போடவேண்டியுள்ளதாகத் திரு டிக்ஸித் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்

இணையமைச்சர்களின் விஜ

8ம் பக்கம் பார்க்க]

## "பண்ணையில் சிலிண்டர் வெடிக்கு 7 ராணுவம் பலி"

—தமிழீழ ராணுவம்

யாழ்ப்பாணம், புதன் பண்ணைக் கடற்கரையோரமாகவுள்ள வாசிகசாலையில் நேற்றுமாலை 7 மணியளவில் பதுங்கியிருந்த ஏழு இராணுவத்தினர் தமிழீழ ராணுவத்தினர் சிலிண்டர் தாக்குதலுக்கு பலி

[8-ம் பக்கம் பார்க்க)

தொண்டமனாற்றில்

## படையினர்மீது புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதல்

யாழ்ப்பாணம், புதன் பலாலி இராணுவ முகாமிலிருந்து தொண்டமனாறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது

(8-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண பிரிப்பு இந்திய யோசனையே!

—ஜி. கே. ரெட்டி

புதுடில்லி டிச-2

இந்தியாவின் வற்புறுத்தலுக்கமையவே இலங்கையரசு, இலங்கையின் கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரித்தது என 'ஹிந்து' பத்திரிகையில் ஜி கே. ரெட்டி தெரிவித்துள்ளார்

இலங்கையின் புதிய பிரேரணைகளில் கிழக்கை மூன்றாகப் பிரித்து மட்டக்களப்பைத் தமிழர்க்கும், அம்பாறையை முஸ்லிம்களுக்கும், திருமலையைச் சிங்களவர்களுக்கும் வழங்க ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

திரு. ரெட்டி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் புதிய பிரேரணைகள்

[5ம் பக்கம் பார்க்க]

## யாழ். வைத்தியசாலையைச் சுற்றி 'வன்முறைகளற்ற வலயம்' உருவாக்க அரசு இணக்கம்

கொழும்பு. செவ் யாழ். அரசவைத்தியசாலையைச் சுற்றி 'வன்முறைகளற்ற வலயம்' ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் இணங்கியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தூதுக்குழுவொன்று கட

(5ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் படத்துக்கு மலேரியா தடுப்புமருந்து

[கொழும்பு]

"எனது தொகுதியில் ஒருமுறை ஜனாதிபதியின் படத்துக்கும், பிரதமரின் படத்துக்கும், எனது படத்துக்கும் மலேரியா மருந்து அடிக்கப்பட்டது"

பொல்காவலை எம் பி சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி நேற்று இவ்வாறு பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறையில்

## புலிகள் தாக்குதல் மூன்று கடற்படையினர் பலி

யாழ்ப்பாணம், புதன் ஊர்காவற்றுறை கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் மீது எமது வீரர்கள் நடத்திய தாக்குதலில் மூன்று கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் விசைப்படகொன்றும் சேத

[5ம் பக்கம் பார்க்க]

## மேலதிக விளக்கங்களுக்காக பேர்னட் கொழும்பு வருவார்?

கொழும்பு டிச 2

இனப்பிரச்னைதீர்வு தொடர்பாக இலங்கை அரசு புதிதாக சமர்ப்பித்த பிரேரணைகள் தொடர்பாக போதிய விளக்கங்களைப் பெறும்பொருட்டு இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு பேர்னட் திலகரத்தின விரைவில் கொழும்பு

[5ம் பக்கம் பார்க்க]

கிரானில் சிலிண்டர் தாக்குதல்

## அதிரடிப் படைவீரர் மரணம் இருவர் படுகாயம்

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டு. கிரான் பகுதியில் நேற்று நடந்த சிலிண்டர் தாக்குதலில் கிரான் அதிரடிப் படை முகாமைச்சேர்ந்த அதிரடிப்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். நால்வர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த நால்வரும்

(5ம் பக்கம் பார்க்க)

உயிலங்குளத்தில் கண்ணிவெடி

## லொறி சிதறியது; பயணம் செய்த படையினர் அனைவரும் பலி!

விடுதலைப் புலிகள் உரிமை கோரல்

யாழ்ப்பாணம், புதன் உயிலங்குளம், ஹொறவப்பொத்தானைக்கும் அநுராதபுரத்திற்கும் இடைப்பட்டவீதி போன்றபகுதிகளில் அரசபடையினர்மீது தமதுவீரர்கள் நடத்திய தாக்குதலில் அரசபடையினர் பலர் இறந்துள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கண்மையில் குடியிருக்கச் சிறந்த (2) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் சட்டத்தரணி சி பொ மயில்வாகனன், சாவகச்சேரி. [C6127]

நல்ல நிலையிலுள்ள LEC Deep Freezer, கடை சோகேஸ் விற்பனைக்குண்டு. (இறைச்சிக் கடைக்கு அருகாமையில்) இ. சோதி C/o திருமதி யோ நடராசா, பொற்பதி றோட், கோண்டாவில். [C6120]

பொமரேனியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு உடன் தொடர்புகொள்ளவும், இராசத்திரம், ஆஸ்பத்திரி வீதி. மானிப்பாய். (நியூபாமசி அருகில்) [C6130]

வட இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட ''மாங்காய் ஊறுகாய்'', ''வெள்ளைப்பூடு அச்சார்'', ''தேசிக்காய் ஊறுகாய்'' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G M 777 K K S. Road and 208 1st Cross St. Jaffna Telephone: 22611. [C5069]

வீட்டுப் பாவனைப் பொருட்கள், தளபாடங்கள், Foam றபர்மெத்தைகள். சிங்கர், Oven Usha தையல்மெஷின்கள். T V. ஹோல் செற். St el Almirah, Office Table, Electic Cooker, கிளாஸ் வகைகள். Vedeo Deck Cevgma Water Pump. Dress-ing Table பெல்ஜியம் கண்ணாடியுடன், Formica சாப்பாட்டு மேசை, வயலின், Show case, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C6136]

[New Typewriters] தட்டச்சு இயந்திரங்கள் (Portables-Optima, Olympia, Silverreed மற்றும் ஆங்கிலம்- தமிழ் Standards உடன் விற்பனைக்கு. Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ம்ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 6084)

### சேவை

எப் பொருள்களானாலும் புதியனவைகளானாலும், பழையனவைகளானாலும் வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும் பழையனவுமாகிய நானாவித பொருட்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட் பொதுச் சந்தை [சந்திக் கருகாமையில்] கோப்பாய். [C 6088]

### தேவை

அனுபவமும் திறமையுமுடையவலேத்மன் தேவை உடன் நேரில் வரவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் விபரங்களுக்கு: தொடர்பு: ஹரன் இண்டஸ்ரீஸ் ராசவீதி, அச்சுவேலி. C 6109

Typist Cum Clerk ஆங்கில தமிழ் சட்டெழுத்தில் நல்ல தேர்ச்சியுள்ள A/L விஞ்ஞானம் படித்தவர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் 10-12-86 இற்கு முன்விண்ணப்பிக்கவும். Bond Institution 58 A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (C6123)

பழைய கொப்பிகள் சோதனைப் பேப்பர்கள் தேவை தொடர்பு கொள்ளவும் அண்ணா இண்டஸ்றீஸ், இணுவில். (A3177)

### சேவை

தலைமயிர் வளர்வதற்கும் நரைக்காது, கொட்டாது வளர்வதற்கும் பண்டைய தமிழ் முறைப்படி சீயாக்காய், மருந்துச் சரக்குகள் அரைக்கவும் ஈஸ்வரி மில்ஸ் நல்லூர். (கல்வியங்காடு சந்தைக்கு எதிரில்) [C6139]

### வகுப்புக்கள்

English Assistant Teachers பரீட்சை 20 மீட்டல் வகுப்புகள் கடந்த கால வினாத்தாளுடனும் மேலும் பயிற்சிப் புத்தகங்களுடனும் ஆரம்பம்! 8-12-86 காலை 10 - 11/30 வரை S B Jyar 12, வைமன் வீதி, நல்லூர். C 6114

A/L 87 விலங்கியல் விசேட வகுப்பு 'முளையவியல்' திரு. K. தம்பிராஜா அவர்களால் 5 12-86 வெள்ளி காலை 7-00-9-00 ஆரம்பம். நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், திருநெல்வேலி. (C 6134)

### வாடகைக்கு

இந்தியா சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்கு பெற்றுக்கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம் கருங்காலி. காரைநகர் C 6106

### MATRIMONIAL

Parents seek bride from respectable Hindu Vellala family for son 29, I P T Kethu in Lagna Contact with all particulars and horoscope Apply: Advt No. C 6138, C/o Eelanadu, Jaffna [C6138]

## உளவள ஆலோசனை நிலையம்

**யாழ். நகரில் ஓர் புதிய உதயம்!**

உங்கள் மனக்கவலைகளை விட்டொழியுங்கள்!
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும்....................

வெளிநாட்டில் பயிற்சிபெற்ற ஆலோசகர்கள் உங்கள் பிரச்சினைகளுக்கு பரிவாயும் அந்தரங்கமாயும் ஆலோசனைகளை வழங்குகின்றார்கள்.

ஆலோசனை நேரங்கள் பிற்பகல்:
வியாழன் 2-30 மணிமுதல் 5-30 மணிவரை.
ஞாயிறு 2-30 மணிமுதல் 5-30 மணிவரை.
மற்றைய நாட்களில் பதிவுசெய்தல் மட்டும்.
காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணிவரை.
[வெள்ளி விடுமுறை தினம்]
நாடுங்கள்;-

**உளவள ஆலோசனை நிலையம்,**
19/3, கொழும்புத்துறை வீதி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:- ஜோ. எகட்டன், செனித் ADS, யாழ்ப்பாணம். (A-3168)

### கருத்தரங்கு

திருநெல்வேலி. செவ்.

''இலங்கையில் இந்துமதமும் பௌத்தமும் அவற்றுக்கிடையிலான கலாசாரத் தொடர்புகளும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 5ம் திகதி வெள்ளி காலை நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி பல்கலைக்கழக வீதியில் அமைந்துள்ள ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி. பத்மநாதன் உரையாற்றுகிறார்.

### கல்வி

ரேடியோ, ரெலிவிசன் திருத்த பயிற்சி செய்முறையுடன் கற்பிக்கப்படுகின்றன ஆரம்பம் புதிய பிரிவு 6-12-86 விபரங்கட்கு; Electronic Technical Centre Kalvai i. Sandilipay. [C 6077]

(தரம் 9) 10ம் ஆண்டில் கல்விகற்க விரும்பும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளை எடுக்கக்கூடிய முதல் 3 மாணவர்களுக்கு 1987ம் ஆண்டு இலவசக்கல்வியை போதிக்க முன்வந்துள்ளோம். பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 5-12 86. (7/12 9-30—11-30 விஞ்ஞானம், (8/12) 9 30—11 30 கணிதம், (9/12) 9-30—11-30 தமிழ் மேற்குறிப்பிட்ட திகதிகளில் போட்டிப்பரீட்சை நடைபெறும்; Science Centre Karaveddy. [C-5925]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர்
சின்னத்துரை
இராசேந்திரம்
(இராசா)**

தோற்றம்: 28-3-1938
மறைவு: 3 11-1986

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் அன்பினால் எமை எல்லாம் வளர்த்து ஆளாக்கியஅன்புத்தெய்வமே எம்மை எல்லாம்ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்திரே உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். எங்கள் குல தெய்வத்தின் மறைவு கேட்டு ஓடோடி வந்து தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 3-12-86 புதன்கிழமை (இன்று) நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்.
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(C 6133)

## அகில இலங்கை ரீதியில் நாவலர் கட்டுரைப்போட்டி

உடுவில் செவ்

சங்குவேலி இந்து மன்றத்தினர் ஆறுமுகநாவலர் விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் கட்டுரை போட்டிஒன்றை நடாத்தவுள்ளனர்.

டிசம்பர் மாதம் 8ம் திகதிக்கு முன்பு கட்டுரைகளை சங்குவேலி இந்து மன்ற செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக் தலைப்புக்களாக நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல், இன்றையநிலையில் நாவலரின் கருத்துக்களின் பொருட்பாடு, நாவலரின் சமய சீர்திருத்தக் கருத்துக்களை நாவலரும் நற்றமிழும் ஈழத்தமிழர் மறுமலர்ச்சியின் முன்னோடி ஆறுமுகநாவலர் ஆகியன அமைய வேண்டும்.

கட்டுரை போட்டிகளில் சிறந்தவை என நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் முதல் ஐந்து கட்டுரைகளுக்கு பெறுமதி வாய்ந்த நூல்கள் பரிசளிக்கப்படும்.

### திருநெல்வேலியில் கஜமுகா சூரன்போர்

யாழ்ப்பாணம், புதன்.

திருநெல்வேலி சிவன் கோவில் கஜமுகா சூரன்போர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இக்கஜமுகாசூரன் ஆலயத்திற்கென புதிதாக அமைக்கப்பட்டதாகும்.

### சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம் புதன்

நீர்வேலி பாலர் பகல் பாடசாலை சிறுவர் தின விழாவும் அமரர் சண்முகநாதனின் ஞாபகார்த்த தினமும் நாளை மாலை பாலர்பாடசாலை விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு.க இ குலேந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில். புன்னாலைக் கட்டுவன் வெளியீட்டுத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. ஏ வி. மயில்வாகனம் நினைவுரை வழங்குவார். (எ)

## DIPLOMA IN NURSING

**தாதிப் பயிற்சியில் டிப்ளோமா**

5-ம் பகுதிக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டது. (1-12-86)

ஓராண்டு நிறைவுக்கான சலுகைகள்
இலவச சீன மருத்துவம் அக்குப்பன்சர் (Achupunture)
இலவச ஆங்கில வகுப்புக்கள்.

உடன்

**North Ceylon Technical Institute**

14, செம்பிற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24355 (A 3216)

## ICMA

STAGE I
(New Syllabus)

| | |
|---|---|
| Economcis | — Mr. S Kathirgamanathan |
| Business Law | — Mr. Eugene Mariampillai |
| Quantitative Methods | — Popular Varsity Lecturer |
| Accounting | — Mr S P Sivapathasundaram |

Fees; Only Rs. 800/-

வார இறுதி வகுப்புகள் ஆரம்பம் 6-12-86

**கன்ரேபியா கல்வி நிறுவனம்**
(Shoot of Oxonia Colombo)
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201 (A-3218)

## வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையத்தில்

தொழில் இலாகாவினால் நடாத்தப்படும்

**தச்சுத்தொழில் பயிற்சி**

இப்பயிற்சி சித்தன்கேணியில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் ஒன்பது மாத காலத்துக்கு நடாத்தப்படும்.

**தகைமைகள்**

1: எட்டாம் வகுப்பு சித்தி.
2. வயது எல்லை: 18க்கும் 30க்கும் இடையில்

தகுதி உடையவர்கள்

1. பிறப்புச் சாட்சிப்பத்திரம்
2. பாடசாலை விடுகைப்பத்திரம்
3. கூடிய தராதரப பத்திரம்

ஆகியவற்றுடன் இயக்குநர், வட்டு தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையம், சித்தன்கேணி என்ற முகவரிக்கு விண்ணப்பம் செய்க. தெரிவு செய்யப்படும் பயிலுனருக்கு நாளுக்கு ரூபா 12/- வீதம் உதவிப்பணம் வழங்கப்படும்.

இயக்குநர்.
வட்டு தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையம்
சித்தன்கேணி.
C 6135

# தென்கொரியாவில் யு. எஸ். ஏவுகணைகளை நிறுத்தும் முயற்சிக்கு சோவியத் கண்டனம்

மாஸ்கோ, டிச. 2

**தென் கொரியாவில் லான்ட்ரேட்டர் ஏவுகணைகளை நிறுத்துவதற்கான அமெரிக்காவின் முடிவை சோவியத் யூனியன் கண்டித்துள்ளது.**

இப் பகுதியில் ஆயுதப் போட்டியைத் தொடர்ந்து அதிகரிப்பதை அமெரிக்காதான் தொடக்கியிருக்கிறது என்றும் சோவியத் யூனியன் மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

இப் பகுதியில் இராணுவ ஆயுதங்களை அதிகரிப்பதனால் ஏற்படும் பயங்கர விளைவுகளுக்கு அமெரிக்காதான் பொறுப்பேற்க வேண்டுமென்றும் சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ராணுவம் ஏற்கனவே தென்கொரியாவை அணு வெடிப்பு சோதனை நடாத்தும் பகுதியாக செய்துள்ளதென்றும் அங்கு அணு ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் நில அடிப்படையிலான ஏவுகணைகளை நிறுத்தி வைப்பதனால் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று சோவியத் யூனியன் மேலும் எச்சரித்துள்ளது. (ஒ)

## மாணவி காயம்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை பாதுகாப்புக் கூட்டு முகாமில் இருந்து கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினுல் குண்டுகள் மாணவி ஒருத்தியின் வயிற்றைத் துளைத்துக் கொண்டு முதுகுப் புறத்தால் வெளியே பாய்ந்துள்ளது.

பருத்தித்துறை வி எம். றோட்டைச் சேர்ந்தவரும், பருத்தித்துறை பெண்கள் கல்லூரி உயர் வகுப்பு மாணவியுமான செல்வராஜா சுகந்தி [வயது 18] என்பவரே தப்பாக்கிச் சூட்டினுல் காயமடைந்தவராவர். [கே]

## சாவகச்சேரி விளையாட்டரங்கு——
# காணியை தனியார் ஆக்கிரமிப்புக்கு ஆட்சேபம்

சாவகச்சேரி, செவ்

சாவகச்சேரியில்விளையாட்டரங்கும் முற்றவெளியும் அமைப்பதற்கெனசாவகச்சேரி நகரசபையினுல் சுவீகாரம் செய்யப்பட்ட சுமார் 175பரப்புக் காணியினை சில தனிப்பட்டவர்கள் ஆக்கிரமிப்புச் செய்யும் நடவடிக்கையை சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் திரு த. நவரத்தினராசா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக்குறித்த நடவடிக்கையானது சட்டவிரோதச் செயல் எனவும் சபையின் எதிர்கால முன்னேற்றம், நகரின் அபிவிருத்தி கருதி காணி சுவீகரிக்கப்பட்ட நோக்கத்திற்குமாறாக யாரையும் செயல்பட வேண்டாம் எனச் செயலாளர் துண்டுப் பிரசுரம் மூலம் பொது மக்களை வேண்டியுள்ளார்.

செயலாளர் மேலும் தனது துண்டுப் பிரசுரத்தில் சாவகச்சேரி நகரத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சுவீகரிக்கப்பட்ட காணிக்கெதிரான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்——
# மலேரியா தடுப்பு நடவடிக்கைகள்

பண்டத்தரிப்பு, செவ்.

மலேரியா நோயை பரப்பும் நுளம்புகளை அழிப்பதற்குத் தெளிக்கப்படும் 'மலத்தியன்' கிருமிநாசினி மருந்து நீண்ட காலத்திற்குப் பின்னர் கடந்த வாரம் யாழ் மலேரியாத் தடுப்பு இயக்கத்திற்கு வந்து சேர்ந்துள்ளது

அனுராதபுரம் மலேரியா தடுப்பு இயக்க களஞ்சியத்திலிருந்து லொறிகள் மூலம் 1350 கிலோ நிறையுள்ள 'மலத்தியன்' வந்து சேர்ந்துள்ளதாகவும் யாழ் மவட்டத்தில் மலேரியா நோய் பரவும் சாத்தியமுள்ள இடங்களுக்கு இந்த மலத்தியன் தெளிக்கப்படவிருப்பதாகவும் யாழ். பிரதேச மலேரியா தடுப்பியக்கப் பொறுப்பதிகாரி டாக்டர் கே. எஸ். சிவகுரு தெரிவித்தார்.

இதே வேளை கிளிநொச்சி மாவட்டதிலும் 'மலத்தியன்' தெளிக்கும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சாரணர் சேவை சிறந்த வழி காட்டி

மாவிட்டபுரம், திங்கள்.

"நாட்டில் சிறந்ததோர் சமுதாயத்தை உருவாக்க சாரணர் இயக்கம் வழிவகுக்கிறது இவ்வியக்கத்தை நாமும் சிறந்த முறையில் பேணி வளர்க்க வேண்டும்."

இவ்வாறு காங்கேசன்றுறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க ஆதரவில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெற்ற வருடாந்தகுருளை சாரணர் விழாவில் பிரதம அதிதியாககலந்து உரையாற்றிய முன்னுள் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. இ. விசுவநாதன் கூறினுர்.

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, செவ்.

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பரிசங்கவேல அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் டாக்டர் கே ஏரம்பு ஜனவரி மாதம் முதல் ஏழாலை அரசினர் மத்திய மருந்தக பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ANTON

பிவிசி குழாய்கள், இணைப்புகள் புதிய விலைப் பட்டியல்

எங்கள் வாடிக்கையாளரின் நலன் கருதிப் புதுப்பித்த விலைப் பட்டியலைப் பின் வருமாறு அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்:

மீட்டர் வீதம் குழாய்கள்

| அளவுகள் | மாதிரி 1000 | மாதிரி 600 | மாதிரி 400 | மாதிரி 250 |
|---|---|---|---|---|
| 20மி. மீ. (½") | 6/40 | - | - | - |
| 25மி. மீ. (¾") | 8/45 | - | - | - |
| 32மி. மீ. (1") | 10/80 | 8/95 | - | - |
| 40மி. மீ. (1¼") | 18/30 | 13/85 | - | - |
| 50மி. மீ. (1½") | 28/95 | 18/55 | 13/90 | - |
| 63மி. மீ. (2") | 41/35 | 29/70 | 22/10 | - |
| 75மி. மீ. (2½") | 55/60 | 45/40 | 33/10 | - |
| 90மி. மீ. (3") | 85/00 | 59/50 | 56/95 | - |
| 110 மி- மீ: (4") | 121/90 | 84/00 | 63/60 | 50/75 |

இணைப்புகள் 1- க்கு ரூ. 3/30 முதல்

சென்ட் அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ் குழு

512, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

தொலை பேசி: 20622 - 4

ANTON

முழுமைச் சேவையின் முன்னேடி

RJA 7278

# வட்டு. லயன்ஸ் ஆதரவில் இலவச மூக்குக் கண்ணுடி

பண்டத்தரிப்பு, செவ்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினுல் கண்பார்வை குறைந்த இப்பகுதியைச் சேர்ந்த 80 பேருக்கு இலவச மூக்குகண்ணுடிகள் கடந்த வாரம் வழங்கி வைக்கப்பட்டன.

சித்தன்கேணியிலுள்ள வட்டு. தொழிற்பயிற்சி நிலையத்தில் இது தொடர்பாக நடைபெற்ற வைபவத்தில் ஏற்கனவே கண்பார்வை பரிசோதனைசெய்யப்பட்டு சிபார்சுசெய்யப்பட்ட 80 பேருக்கு கழகத் தலைவர் டாக்டர் எமில் அந்தனுசியார் இந்த இலவசமூக்குக் கண்ணுடிகளை வழங்கினுர்.

## நாவலர் பேச்சுப்போட்டி:
# இராமநாதன் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம்

உடுவில், செவ்.

இணுவில் அ மி. த. க. பாடசாலையில் நடைபெற்ற ஆறுமுகநாவலர் பேச்சுபோட்டிகளில் மூன்று பிரிவுகளிலும் இராமநாதன் கல்லூரி மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

மேற்பிரிவு: ஜெயலட்சுமி இராமநாதன் (இராமநாதன் கல்லூரி), நதவஜோதிநாதன் (இணுவில் சைவமகாஜன மகாவித்தியாலயம்), க உமாசுதன் (இணுவில் சைவமகாஜன வித்தியாலயம்).

மத்தியபிரிவு: கோமதிபத்மநாதன் (இராமநாதன் கல்லூரி), சுபோதினி கனகசுந்தரம் (இராமநாதன் கல்லூரி), அ. குலநாயகி (இணுவில்

[6ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

உன் நண்பனை சோதிப்பதானுல் முதலில் ஒரு பொய்யைக் கூறு, அதை அவன் வெளிவிடாமல் பாதுகாத்தால் உண்மையைக் கூறிவிடு.

—ஜேம்ஸ் எப்; பைனர்ஸ்

# நமது நோக்கு

## சாதாரண விடயமல்ல!

மின்னுமல். முழங்காமல் மழை பெய்து ஓய்வதுபோல எதுவித ராஜாங்க சலசலப்பும் இல்லாமல் இஸ்ரேலிய அரசுத்தலைவர்ஹெர்ஸொக் இலங்கைக்கு வந்து சென்றுள்ளார்.

அவர் சடுதியாக வேறு எங்கோ செல்லும் மார்க்கத்தில் இங்கு வந்துதரித்து செல்லவில்லை. முன் ஏற்பாட்டின்படியே அவர்இங்கு வந்து சென்றுள்ளார் என்பது இப்பொழுது பலவகையாலும் தெரியவந்துள்ளது.

இவ்விஜயம் பற்றி கடந்த வாரம் இலங்கை பாராளுமன்றத்தில் காரசாரமான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கொழும்பு மத்திய தொகுதி உறுப்பினர் ஜனுப் ஹலிம் இஷாக் இது பற்றி குறிப்பிட்டபோது; "ஓர் இனத்தை இன்னொருஇனத்தின் மீது பகைமை கொள்ளச் செய்வதில் இஸ்ரேலியர்கள் கைதேர்ந்தவர்கள், கிழக்கு மாகாணத்தில் எதுவிதசச்சரவுமின்றி வாழ்ந்து வந்துள்ள தமிழ்-முஸ்லிம் மக்கள் மோதிக்கொண்டதற்கு இவர்கள்தான் காரணம். இஸ்ரேலியர் இலங்கைக்கு வந்தபிறகுதான் இவ்வாறான மோதல்கள் உருவாகின" என்று சாடினுர்.

இஸ்ரேலிய தலைவர் வருகைக்கான காரணமென்ன, ஜனுதிபதி ஜெயவர்த்தனுவுடன் அவர் நடத்தியபேச்சுக்கள் ஏன் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன என்று அத்தனகல பிரதிநிதி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி வினவினுர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா அரசின் மீது நடத்திய மிகக் கடுமையான தாக்குதலில், "இஸ்ரேலியரை இந்த அரசாங்கம் இங்கே அழைத்து அவர்களை ஆன்று சுதந்திரமாக இயங்க அனுமதித்துள்ளது. இதனுல் அரபு நாடுகளுடனும், முஸ்லிம் உலகுடனும் எமக்கிருந்த நட்பு பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகாலம் இங்கு இருந்துவிட்டார்கள். பயங்கரவாதத்தை ஒழிக்க அவர்களால் என்ன செய்ய முடிந்தது?" என்று கேட்ட அவர் "இஸ்ரேலியர்தாம் மிகப் பெரிய சர்வதேசப் பயங்கரவாதிகள்" என்றும் குறிப்பிட்டார்.

"புலிகளால் சிறை வைக்கப்பட்டுள்ள இருராணுவத்தினரை மீட்பதற்கு இஸ்ரேலியர் வழங்கிய ஆலோசனைதான் என்ன?" என்று அவர் மேலும் கேட்டார்.

நியூயோர்க்கில் வைத்து இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் யிட்ஷாக் ஷமிரை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீது சந்தித்ததுபற்றியும், பாரிஸ் நகரில் ஜனுதிபதி ஜெயவர்த்தனு இஸ்ரேலிய பிரதமர் ஷிமோன் பெரெஸைசந்தித்துப்பேசியது பற்றியும் குறிப்பிட்ட திரு. பண்டாரநாயக்கா இவைகளையடுத்து இஸ்ரேலிய அரசுத் தலைவரை இங்கு வரவேற்றதின்மூலம் இந்த அரசு மிகப்பெரிய தவறை இழைத்துள்ளது என்றுர்.

வெளிநாட்டு அமைச்சரின் இனத்தவர்கள் இஸ்ரேலியரால் படுகொலைசெய்யப்படுகிறுர்கள் என்று சுட்டிக்காட்டிய அவர் தமது கட்சி பதவிக்கு வந்தால் "இஸ்ரேலியரை இங்கு இருந்து துரத்திவிடும்" என்றும் சூளுரைத்தார். இவ்வாறு இஸ்ரேலியரின் இலங்கை வருகை குறித்து எதிர்க்கட்சியினர் வெளியிட்ட பல்வேறு கருத்துக்களுக்கும் அரசதரப்பில் வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ ஸி எஸ் ஹமீத் அளித்த பதில்கள் வெறும் சாக்குப்போக்கு சொல்வதாகவே அமைந்தன.

இஸ்ரேலியருடன் எமக்கு ராஜீய உறவுகள் இல்லை. அதனுல் இஸ்ரேலிய தலைவரின் விஜயத்தையடுத்து கூட்டறிக்கை விடவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென அவர் விளக்க முயன்றுர்.

ஆனுலும், சர்வதேசமட்டத்தில் பெரும் சர்ச்சைக்குரிய ஒரு நாட்டின் தலைவர் இலங்கை வந்து போயிருக்கிறுர். இலங்கைத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் இந்தப் பேச்சுக்கள் பற்றிய விபரங்களை பாராளுமன்றமும், அதன்மூலம் இந்த நாட்டு மக்களும் அறிந்துகொள்ள உரிமையுண்டு.

இஸ்ரேலிய அதிபரின் விஜயம் குறித்து அண்டை நாடுகள் சிலவும், அரபு நாடுகள் பலவும் அக்கறை கொண்டுள்ளன.

ஈரானுக்கு இஸ்ரேல் மூலமாக ஆயுதம் வழங்கிய அமெரிக்க அதிபரின் ஊழல் விவகாரத்துக்கும் அவரது ஆத்ம நண்பனுன இலங்கை அரசுக்கும் ஏதாகிலும் தொடர்புஉண்டா? அந்தத் தொடர்பை எவ்வாறு மூடிமறைக்கலாம் என்பதை ஆராயத்தான், இஸ்ரேலிய அதிபர் இங்குவந்து உயர் மட்டப் பேச்சுக்களை நடத்தினுரா? இவ்வாறுன சந்தேகங்கள் உருவாகக்கூடிய சூழ்நிலை இப்போதுதோன்றியுள்ளது.

எனவே இஸ்ரேலிய அரசுத் தலைவரின் விஜயத்தின் நோக்கம்பற்றியும், அவர் இலங்கைத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் விபரம் பற்றியும் விரிவான அறிக்கையொன்றை இலங்கை அரசு உடனடியாக வெளியிடவேண்டும்.

இல்லையெனில் சர்வதேச மட்டத்தில் இந்தவிவகாரம் மேலும் சூடுபிடிக்கும்வேளையில் இலங்கையும் சந்திக்கு இழுக்கப்படலாம். இது அமெரிக்க மக்களின் நன்மதிப்பையும் இழக்கவைத்துவிடும்.

உலக அரசியல் — அவசானி

## காலைத் தினசரிப் பத்திரிகைகளுக்குதவ காலனைத்தழுவிய 5-ம் ஜோர்ஜ் மன்னர்!

## ஐம்பது வருடத்துக்குப்பின் அம்பலமாகும் இச்செய்தி

## வேந்தனும் ஓங்குக என்ற வாழ்த்துக்கு உடன்பட்டதா?

## றீகன், தாட்சர், ஹெல்மட்கோல பயங்கரவாத ஒழிப்பின் மும்மணிகள்!

## காந்தி – கொர்பச்சேவ் X இஸ்லாமபாத்

## இவர்கள உலகசமாதானத்துக்கும் ஆசிய அமைதிக்கும் விடுத்திருக்கும் சவால்

## கொரிய (Korea) குடாநாட்டைக் கலக்கிவரும் பயங்கரச் செய்திகள்.

### பிரிட்டன்

எத்தனை பாரதூரமான இரகசியங்கள் அரச அரண்மனைகளில் மறைந்து கிடக்கின்றன பக்கிங்காம் பலேஸ் பற்றிய செய்தி ஒன்று 50 வருடத்துக்கு முன் மறைந்த ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பற்றியது அரசர் இயற்கை எய்திய செய்தியில் செயற்கையும் கலந்திருக்கிறதென்ற தகவல் இன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆதவனையே அஸ்தமிக்கவிடாத அளவிற்கு பரந்து வந்த காலத்தில் 26 வருடம் அரசு புரிந்த ஐந்தாம்ஜோர்ஜ் தமது 70வது வயதில் நோய்வாய்ப்பட்டிருந்தார். மரணம் கிட்டிய தறுவாயில் மகாராணி மேரியும், சிரேட்ட புத்திரனும் [பின்னர் எட்டாம் எட்வார்ட் மன்னர், அதன்பின்னர் வின்சன் கோமகன்], தங்கள் அருமை கணவர்; தந்தை சாவை எதிர் நோக்கும் மன்னர் துன்பப்படுவதை விரும்பவில்லை என்று அரச வைத்தியர் டோசன் பிரபுவிற்கு அறிவித்தனர். ஆனுல் மரணச் செய்தி எவரும் விரும்பி வாசிக்காத மாலைப் பத்திரிகைகளில் இடம் பெறுவதை எவரும் விரும்பவில்லை பத்திரிகைகள் இதனை மணந்து பிடிக்க முடிந்தது டோசன் பிரபுவே தமது மனைவிக்குத் தொலைபேசிமூலம் கொடுத்த தகவல் "கொஞ்சம் தாமதித்தே லண்டன் டைம்ஸ் பிரசுரம் தொடங்கவேண்டும்" என்பது

இந்தவிபரங்கள் யாவும் மன்னரின் வைத்திய நிபுணர் 'டோசன் பிரபுவினது வாழ்க்கை வரலாறு' என்ற நூலை 950ல் எழுதிய பிரான்சஸ் வாடசன். இன்று 'மன்னரின் மரண [வரலாறு' என்ற கட்டுரையை ஒருபிரபல சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறுர்.

அரச வைத்தியர் மன்னரை விண்ணுலகு அனுப்ப வேண்டுமென்ற தீர்மானத்தை தெளிவாக விளக்கியிருப்பதாக அக்கட்டுரை குறிப்பிடுகின்றது. அதன் இரகசியத்தைத் தான் ஏற்கனவே வோட்சன் அறிந்திருந்த போதும் அரச குடும்பத்திற்கும், அதன் பிரபல வைத்தியருக்கும் சஞ்சலமளிக்குமென்பதால் இதுகாறும் இதனை வெளியிடவில்லை.

மன்னரின் பேத்தி இன்றைய மகாராணி எலிஸபெத் இந்த விபரம் அறிந்திருந்த போதும் இது பற்றி எதனையும் குறிப்பிட மறுத்துவிட்டார். இந்த சம்பவத்தில் நேரடியக ஈடுபட்டவர் இன்று ஒருவரும் உயிருடனில்லை.

அரசவைத்தியரின் விளக்கம் சர்ச்சைக்குரிய விடயம் தாங்க முடியாத துயரத்தைக் கொடுக்கும் நோய் நிச்சயம் மரணத்தை ஏற்படுத்துமானுல் நோயாளி இலகுவாக, துன்பமற்ற மரணத்தை எய்தும் வகையில் வைத்தியர் அதற்கேற்ற மருந்து வழங்குவது (Euthanasia) யூதனேசியா என்று வழங்கப்படுகிறது. இது சட்டத்துக்கு அமையாததாகும், வைத்திய உலகில் ஒரு சாரார் இந்த முறையை அனுசரிக்கின்றனர்.

அதுஅவ்வாருக பிரிட்டிஷ் பேரரசர் ஒருவர் இறைவனுல் விதிக்கப்பட்ட நேரத்தை ஒதுக்கி "மருத்துவம்" என்ற அடிப்படையில் மரணத்துக்கு ஆளாகலாமா? பேரரசரோ அல்லதுசாமானியபிரஜையோ இந்த ஒழுங்கற்ற முறைக்கு கட்டுப்படுவதற்கு அதிகாரம் வழங்கும் பொறுப்பு எவருக்குமுண்டா?

இந்த வினு இவ்வாறிருக்க அரசவைத்தியர் மகாராணி மேரியையும் மூத்தமகனையும் உசாவி அறிந்த பின் காலம் தாழ்த்தினுல், அரசரின் மறைவுடன் தொடர்பான ஆராதனை, அந்தியகிரியைகளுக்குரிய மனநிம்மதி கிடையாதென்பதை அறிந்தார். சில மணித்தியாலங்களில் மரணத்தை எதிர்பார்க்கும் வேளையில், அதனை விரைவுபடுத்தக்கூடிய மருந்தை அரசனின் உடம்பில் ஏற்றினுர்.

மரணச்செய்தி விடியற்காலை பத்திரிகைகளில் இடம்பெறவேண்டுமென்ற மற்றைய காரணத்தையும் அரசகுடும்பத்தினர் பெரிதும் விரும்பினர். ஒரு மணித்தியாலயத்தில் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் ஆவி பிரிந்தது.

"அரசர் இறந்தார், அரசர் நீடுழிவாழ்க" என்ற பிரகடனம் வெளியிடப்பட்டது.

"அரசன் எவ்வழி, பிரஜைகள் அவ்வழி" யன்ற கோட்பாடு இச்சம்பவத்திற்கு கண்டனம் எழுப்புகிறது

"கையோடு கம்மாரிசு" என்று சொல்லும் வகையில் தகப்பன் மறைவில் பட்டத்துக்குவந்த எட்டாம் எட்வார்ட் மன்னர், முடிதுறக்க வேண்டிய நிர்ப்பந்தம் தெய்வத்தின் தண்டனையோ? என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அண்மையில் இறந்த அவருடைய மனைவி வின்சர் கோமகளுக்கு இறந்த பின்னரும் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் செய்த அவமரியாதை கருமசெயல்களின் (சங்கிலிக் கோவை) என்பது தவறு?

### றீகன், தாட்சர் ஹெல்மட்கோல்

சர்வதேசபயங்கரவாத ஒழிப்பு தம்கையில்தான் உண்டு என்னும் அமெரிக்க அதிபர் பிரிட்டிஷ் பிரதமர் மேற்கு ஜர்மன் அதிபர், கள் பதவிக்காலத்தில், ஹிட்லர் போல் ஆட்சி நடத்த துணிந்திருப்பது இக்கால சர்வதேசவரலாற்றின் முட்டாள்தனமெனலாம்.

வருகிறமாதம் மேற்கு ஜேர்மன் தேர்தலில் ஹெமட்கோலின் கூட்டணி அரசு மீண்டும் பதவிக்குவரலாம், ஆனுல் ஜெர்மனியை [மேற்கு கிழக்கு] ஒன்று படுத்தி மாஸ்கோவிற்கு ஒரு பாடம் படிப்பிப்பது மிக எட்டத்திலே என்பது ஜெர்மன் மக்கள் அறிவர். போலின் சுவர்கட்டப்பட்டபோது ஒருமாதத்தில்: இதுஉடைபடுமென்று ஆருடம் சொன்னவைகள் இன்று எங்கே?

பிரதமர் தாட்சர் இன்னொரு முறை ஆட்சிக்கு வருவது பிரிட்டிஷ் மக்களின் அரசியல் முதிர்ச்சியைப் பொறுத்திருக்கிறது! போர்க்கலைட் யுத்தம்; லிபியாவை விமானத்தால் தாக்குவதற்கு றீகனுக்கு பிரிட்டிஷ் விமானத்தை கொடுத்துதவியது; இன்று பயங்கரவாத ஒழிப்பியக்கத்தின் பிரமுகர்; தென் ஆபிரிக்காவிற்கு இனவெறி ஆட்சி நடத்த சாதகமானவர்; இது மட்டுமல்ல சோஸலிச நாடுகளை மட்டந்தட்ட நேற்றுே நிறுவனத்தைப் பலப்படுத்த றீகனுடன் சேர்ந்து, றீனிடம் சரணடைந்திருக்கிறுர். பிரிட்டனின் பழைய பெருமை மங்கிய போதும், சங்கு போல் சுட்டாலும் வெண்மை தரும் மக்கள் கொண்ட நாடு, இரு சகோதரர்கள் பயங்கரவாதிகள், என்பதால் ஒருவர் பிரிட்டனில், மற்றவர் மேற்கு ஜெர்மனியில் சிறையிடப்பட்டிருக்கின்றனர். இதனை விளம்பரப்படுத்தி இம் மூவரும் உலகை சர்வதேச பயங்கரவாதத்திலிருந்து மீட்க கங்கணம் கட்டுகின்றனர். நீண்டகாலம் நிலைக்காது இவர்கள் ஆட்சி.

### காந்தி கொபர்ச்சேவ் இஸ்லாமபாத்

பங்களூரில் நடைபெற்ற (SAARC) மநாட்டில் உருப்படியான சாதனைகள் இயற்றுத போதும் இலங்கை ஜனுதிபதியின் நெஞ்சை உருக்கும் 'அஹிம்சா' உரையை கேட்டோர் பிரமித்தனர். காந்தி – ஜெயவர்த்தனுவின் நந்தி மலைப் பேச்சுக்கள் பற்றி சிவபிரானைப் பிரதோஷ தினத்தில் கேட்டால் அது பயனுடையதாகவிருக்கும்.

இன்று புதுடில்லி என்றும் காணுதவகையில் குதூகலித்த நிகழ்ச்சி காந்தி-கொர்பச்சேவ் சந்திப்பு அனைத்து இந்திய மக்களையும் கவர்ந்த வைபவமிது.

முடிவில் பல பிரகடனங்கள் வெளியாகி புதுடில்லிப் பிரகடனம் - போர் தவிர்ந்த உலக ஆயுத ஒழிப்பினுலேயே சாத்தியமாகும். ஆசிய பாதுகாப்பு சீனுவுடன் ரஷ்யா கொள்ளும் உறவு இதனைப் பாதிக்காது. இந்து சமுத்திர பிரதேசம் - அமைதிப்பிராந்தியமாக்கப்பட வேண்டும்! இறுதியில் அப்கானிஷ்தானுக்கு ஒரு சுதந்திர ஆட்சி கிடைக்கும் சாத்தியம் உண்டு! பாகிஸ்தான் இது பற்றி விச

(5-ம் பக்கம் பார்க்க)

### காலைத் தினசரி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னப்படவேண்டியதில்லை. அண்டை நாடுகளான இந்தியா ரஷ்யாவுடன் சமாதானமான நல் புரிமைபூண்டு வாழவேண்டும்!

கந்தி கொர்பச்சேவ் உடன்பாடுகள் பொதுவாக அகில உலகையும் சிறப்பாக ஆசியாவையும் பொறுத்ததாகும். இதற்குமாறாக இஸ்லாமாபாத் வீட்டிலிருந்து கொண்டே மறுத்தான் விட்டது தெற்காசியாவின் ஸ்திரமான ஆட்சிகள் நிலவுவது குரஷ்யா முன்வரவேண்டும். பங்களூரின் சின்ன (ஷா)ர்க் இங்கு பெரிய சா(ஷா)ர்க்சுருக்கச் சின்னதும் பெரிதும் சேர்ந்து என்ன செய்ய முடியுமென அதிபர் ஸியவின் எதிர் நீச்சல் போலும்.

### கொரியாக் குடாநாட்டின் குழப்பங்கள்

வடக்கும் தெற்கும் ஜென்மப் பகைவர். வடகொரியாவின் அதிபர் மிகப்பெரும் பிரபலம்பெற்ற கிம் சுங்-II சுட்டுக் கொல்லப்பட்டாரென்ற பொய்யான செய்தியை தென் கொரியா பரப்பி இருந்தது வடக்கில் புதிய அதிபராக சுங் தனது மகனை நியமிக்க போகிறாரென்ற அடிப்படையில் அந்த பரபரப்பு பரவியிருக்கிறது. போர் மயமான ஆரவாரம் இருப்பது பொய்.

தெற்கில் ஜனாதிபதிசுண்டுவின் ஆட்சி மக்கள் எதிர்ப்பால் குறிப்பாக இளைஞரின் இடதுசாரி இயக்கங்களால் பெரிதும் தளர்ச்சியடைகின்றது. இதனைத் திசை திருப்ப தனது அண்டைநாட்டின் பகைமைக்குவப்பான இப்பரபரப்பான செய்தியைப் பரப்பியிருக்கலாம்.

கிம் சுங் காலமானார் என்ற பொய் செய்தி வெளியாகும் போதே அதிபர், மொங்கோலிய தூதுக்குழு ஒன்றை வரவேற்றுப் பேச்சுக்கள் நடத்தினார். இன்று அகில உலகமே ஒரு சிறு நாடாக சுருங்கியிருக்கும் வேளையில் இப்பொய்வதந்தியை உடனடியாக திருத்த முடியவில்லையென்றால், சர்வதேச தொடர்பு ஸ்தாபனங்களில் எத்தகைய விஷமத்தனம் இருக்கிறதை நிரூபிக்கிறது. நாடுகளின் விருப்பு வெறுப்பு ஆட்சிகளின் பக்கச்சார்பு இச்சம்பவத்தில் நன்றாக மிளிர்ந்தன.


சிலதினங்கள் மட்டும்
**வெலிங்டன்**
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
**நிலவு சுடுவதில்லை**
(கலர்)
அடுத்த வெளியீடு
**யேசுநாதர்**

**லிடோ**
10-30, 2-30, 4-30, 6-30
Yul Brynner,
Steven Mcqueen
in
MAGNIFICENT
SEVEN
[Attack And Action]

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
**வெலிங்டன்** திரையில்
10-30 2-30 6-30
பிரேம்நஸீர் - முரளி
L ஜயலட்சுமி-
திருக்குருச்சி நடித்த
**யேசுநாதர்**
12 முதல்
TOO HOT TO HANDLE
(Adults only)


## யாழ். குடாநாட்டை மீண்டும்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராடுகிற என் சகோதர போராளிகளை கேட்டுத்தான் செயல்படுகின்றேன். வேறு யார் கருத்தையும் கேட்பதில்லை.

தமிழ்நாட்டுமக்களை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். தமிழின உணர்வு இன்னும் அழியவில்லை என்று நம்புகின்றோம். இப்போது நடந்துகொண்டிருக்கிற தலைவர்களின் சேரமப்பனிமூட்டம் போன்றது. அது காலைடையில் கலைந்து ஒளி கிடைக்கும் என்று நம்புகிறோம்.

கே: இப்பொழுது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழீழத்தில் எந்தெந்த பகுதிகள் இருக்கின்றன?

ப: யாழ்குடா நாடுமுழுவதும் எங்கள் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது தவிர மன்னார் மாவட்டத்தில் பலகிராமங்களும், கிளிநொச்சி மாவட்டமும் எங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன, இந்த பகுதிகளில் பொலிஸ் நிர்வாகம் என்பதே கிடையாது. வவுனியாவிலும் இல்லை.

சிவில் நிர்வாகத்தை நாங்களே கண்காணித்தாலும், குடும்பத்தகராறு, நிலத்தகராறு போன்ற ஊர்பிரச்னைகளை கவனிக்க பெரியமனிதர்கள் அடங்கிய இணக்க சபையை அமைத்திருக்கிறோம். இந்த சபையில் எல்ல சமூகத்தினரும் இருக்கிறார்கள் அந்த சபையே தீர்ப்புச் சொல்லி விடும்!

உணவு உற்பத்திக்காக அதிக பயன் தரக்கூடிய விதைகளைக் கொடுத்து விவசாய வளர்ச்சிகளையும் கவனித்து வருகின்றோம் போக்குவரத்து கட்டுபாடு. வரி வசூல் எல்லாம் நாங்கள் தான் செய்கிறோம். மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. டி.வி, வானொலி எங்களால் நடத்தப்பட்டு வருகிறது.

கே: நாணயம் அடிப்பது...?

ப: அது பற்றித்தான் இப்போது திட்டமிட்டுக்கொண்டிருக்கிறோம். அதில் மிகவும் கவனம் சேவை என்பது உங்களுக்கே தெரியும்.

உங்களுடைய இராணுவ நிலைமை எப்படி இருக்கிறது...?

எங்களைப் பொறுத்தவரை நிறைய வெற்றிகள் பெற்றுக் கொண்டிருக்கிறோம். சிங்கள இராணுவம் பலவீனப்பட்டு வருகிறது. கண்ணிவெடிக்கும் நொறுங்காத கவசவண்டிகளை தென் ஆபிரிக்காவிலிருந்து சிங்கள அரசு கொண்டு வந்திருந்தது அதையும் வெற்றிகரமாக உடைத்து நொறுக்கி விட்டோம் இரண்டு சிங்கள இராணுவவீரர்களை உயிருடன் பிடித்தோம்.

கே: ஒரே கட்சிதான் ஆட்சியில் இருக்கும்! சர்வாதிகார ஆட்சிதான் நடக்கும் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று சொல்லப்படுகின்றது. இது எப்படி நியாயமாகும்?

ப: தவறாகப் புரிந்திருக்கிறீர்கள் ஜனநாயகமும் சோஷலிஸமும் இரு முரண்பட்ட அரசியல் லட்சியங்களைக் குறிக்க நிற்பதாகப் பலர் கருதக்கூடும். இது தவறான கண்ணோட்டமாகும்.

மக்கள் ஜனநாயகம்தான் அங்கிருக்கும். சோஷலிஸ ஆட்சிதான் அங்கு நடக்கும் பத்திரிகைச் சுதந்திரம் இருக்கும். வழிபாட்டுச் சுதந்திரம் இருக்கும் ஏழை-பணக்காரன் என்ற வர்க்க பேதமற்ற ஜனநாயக சோஷலிஸம் இருக்கும். மக்கள் ஆதரித்துத் தேர்வு செய்யும் ஒரே கட்சி இருக்கும். இதுதான் எங்கள் தமிழ் ஈழம்!

கே: தமிழீழத்தின் தலைநகர் எது?

ப: திருகோணமலை இதற்காகத்தானே பெங்களூரில் தகராறு நடந்தது!

கே. வெற்றி நெருங்கிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் எல்லாப் போராளிகள் அமைப்புகளும் ஒன்றுபட்டுப் போராடலாமல்லவா?

ப: சில களஅமைப்புகள் வெறும் அறிக்கைகள் மூலம் தான் செயல்படுகின்றன. நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை நாங்களும் ஈரோஸ் அமைப்பும் தான் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் இந்த நிலையில் கட்டுப்பாடில்லாத களஅமைப்புகளுடன், மக்கள் மீதே தாக்குதல் நடத்தும் அமைப்புக்களுடன் எப்படி இணைந்து போராட முடியும்? இதனால்தான் சிறுசிறு இயக்கங்களுக்கு நாங்கள் தடைவிதித்திருக்கிறோம். சிலஅமைப்புகள் தங்களை தாங்களேதடை செய்துவிட்டுப் எங்கள் மீது பழியைப் போட்டு விட்டுப் போய்விட்டனர்கள்.

### ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி திருநாவுக்கரசு
விமலா
மண்ணுலகம்:
27-11-1967
விண்ணுலகம்:
13-12-1985
திதி: 3-12-1986

மாலா எங்கள் மணி விளக்கே
இல்லத்தின் குலவிளக்கே
அன்பின் பாசமலரே,
அறிவின் சுடர்விளக்கே
உன் திருமுகம் எம் கண்களில் இருந்து மறைந்தாலும், உனதுடல் மண்ணுள் மறைந்தாலும் உனதுயிர் எம் இதயத்துள் சங்கமித்துவிட்டது. ஆகவே நீ எங்களுடனேயே இருக்கின்றாய் ஆகவே நீ இப்போது பேறு திருநாமத்துடன் எம்முடனேயே வீற்றிருக்கின்றாய், உன்னை சொர்க்கத்தில் வீற்றிருக்கச் செய்த எல்லாம் வல்ல இறைவனை நன்றி கூறிக் கொள்ளும் நீங்காத பிரியமுள்ள அன்னையும், பிதாவும், அன்புச் சகோதரர்கள், ஆச்சி, அம்மம்மா, அக்கா, அத்தான், உறவினர், நண்பர்கள்.

V. திருநாவுக்கரசு,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். [C 6152]

### கடைசி நேர வரி விளம்பரம்

**சேவை**

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் பிலிம்கள், அல்பங்கள் விற்பனை செய்வதுடன் பிறேம்கள் செய்தலுக்கும் ஸ்ருடியோ நித்தியசித்ரா, சங்கானை. [C 6019]


# மிது வீடியோ மூவிசாரின்
## இன்றைய வெளியீடுகள்

(1) மோகன் — பானுப்பிரியா — செந்தில்
நடித்த
★ **சலங்கையில் ஒரு சங்கீதம்** ★
(தரமான பிரதி)

(2) ராஜீவ், ரேகா, செந்தில், சுலக்ஷனா
நடித்த
★ **நம்ம ஊரு நல்ல ஊரு** ★
(தரமான பிரதி)

**மிது வீடியோ மூவிஸ்**
பிரதான வீதி, சித்தன்கேணி
A 3178


### இந்திய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு திட்டங்களின் கீழும் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கான கூட்டுறவு நிதிமற்றும் வளர்ச்சி வங்கியின் திட்டங்களின் கீழ் குடியமர்த்தப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கேரளம் கர்னாடக மாநிலங்கள் அல்லது வேறு மாநிலங்கள் காலப்போக்கில் வகுக்கும் திட்டங்களின் கீழும் அவர்கள் குடியமர்த்தப்படக்கூடும் என்றும் திரு நட்வர் ஸிங் தெரிவித்தார். [ஒ]

### கிரானில் சிலிண்டர்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஹெலிகொப்டர் மூலம் பொலநறுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து கிரான் மெயின் வீதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் பல உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் பலரும் அதிரடிப் படையால் தாக்கப்பட்டதாக மட்டு பிரஜைகள் குழுவிற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

பலியான அதிரடிப்படை வீரர் பதுளையைச் சேர்ந்தவராவர் அவரது சடலம் பதுளைக்கு ஹெலிகொப்டர்மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

### யாழ் வைத்தியசாலையை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த மாதம் யாழ்ப்பாணம் வந்து இத்தகைய ஒருவலயம் ஏற்படவேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே. இதற்கு இப்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இணங்கியுள்ளார்.

இதன்படி யாழ்.வைத்தியசாலையைச் சுற்றி 200 மீட்டர் சுற்றுவட்டாரத்தை 'வன்முறையற்ற வலயம்' ஆக்கப்படுமெனத் தெரியவருகிறது.

அரசாருத்துவ அதிகாரிகள் சங்கஅதிகாரி ஒருவர் தகவல் தருகையில் இவ்வலயம் பற்றிய வரைபடம் ஒன்றை ராணுவ கூட்டுபணிப்பகத்துக்கு கட்டளையிடப் பட்டிருப்பதாகவும் இவ்வரைபடம் தமக்குகிடைத்துள்ளதாகவும் கூறினர். இவ்வலயம் பாதுகாப்பு படைகளினாலும் யாழ் வைத்தியசாலை அதிகாரிகளினாலும் கண்காணிக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் இவ்வலயத்தை கௌரவிக்கவேண்டுமெனவும் கூறினர். (கூ-ஊ)

### மேலதிக விளக்கம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வார் என புதுடில்லி ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையின் புதிய பிரேரணைகளுடன் திரு. திலகரத்தின கடந்தவாரம் புதுடில்லி சென்றிருந்தது தெரிந்ததே. அங்கு அவர் இணையமைச்சர்கள் சிதம்பரம், நட்வார்சிங், வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஷ்வரன் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தினார் இந்த பிரேரணைகள் ஏற்கனவே இருந்த குழப்ப நிலையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன என இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன முன்னதாக இலங்கை அரசு சிதம்பரம் குழுவும் கொழும்பில் தெரிவித்தவைக்கும் திரு. திலகரத்ன மூலம் இந்தியா அனுப்பிய பிரேரணைகளுக்குமிடையே வேறுபாடுகள் இருப்பதாக இந்திய அரசு கூறியிருந்தது தெரிந்ததே. [ஊ]

### கிழக்கு மாகாணம்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்க் குழுக்களிடம் சமர்ப்பிக்கப்படுமுன் பல விளக்கங்கள் கோரப்பட வேண்டுமென இந்திய அரசு அதிகாரிகள் எண்ணியுள்ளதால் திரு திலகரத்தின விரைவில் கொழும்பு செல்லலாமென எதிர்பார்க்கப்படுவதாகக் கூறியுள்ளார். அத்துடன் பந்து இப்போது ஜே ஆர். பக்கம் எனவும் ரெட்டி கருத்துத் தெரிவித்துள்ளார். [கூ-ஊ]

### ஊர்காவற்றுறை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி

மாக்கப்பட்டதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊர்காவற்றுறை கோட்டையை அண்மித்த கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் மூன்று கடற்படைவிசை படகுகள் ரோந்து சென்று கொண்டிருந்த மயம் எமது வீரர்கள் கடற்கண்ணி வெடியொன்றினை வெடிக்கச் செய்ததில் ஒருவிசைப்படகு சிக்குண்டு வெடித்துச் சிதறியது. அதில் மூன்று கடற்படையினர் காணப்பட்டனர். மூவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை அக்கடற்பகுதியில் பெற்றோலும், படகின் துண்டுகளும் மிதந்தவாறு இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. [ஒ]

### உயிலங்குளம்---

1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தள்ளாடி ராணுவ முகாமில் இருந்து 300க்கும் அதிகமான ராணுவத்தினர் 2 பவல் ஆமட்கார், 3 கவச வண்டிகள், லொறிகள் உட்பட 21 வாகனங்களில் உயிலங்குளத்தில் வங்கிக் கட்டிடம் ஒன்றில் முகாம் அமைக்கும் நோக்குடன் சென்றுகொண்டிருந்த சமயம் உயிலங்குளத்தில் வைத்து எமது வீரர்கள் ரோந்து வந்துகொண்டிருந்த லொறியொன்றின் மீது தரைக்கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டதில் லொறி சிதறியதுடன் தீப்பற்றிக்கொண்டது அதில்வந்த அனைத்து ராணுவத்தினரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இதேவேளை ராணுவத்தினர் முகாம் அமைப்பதற்காகப் பயன்படுத்தவிருந்த வங்கிக் கட்டிடமும் எமதால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

### 5 பொலிஸார் பலி

கடந்த 28ம் திகதி ஹொறவப்பொத்தானைக்கும் அநுராதபுரத்துக்கும் இடைப்பட்ட வீதியில் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று வந்துகொண்டிருக்கையில் எமது வீரர்கள் அந்த ஜீப் வண்டி மீது நேரடித் தாக்குதல் நடத்தியதில் அதில்வந்த ஐந்து பொலிஸார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். [ஒ]

## தலைமை அலுவலகம்

வேலணை, செவ்:

தீவுப்பகுதி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் தலைமை அலுவலகத் திறப்பு விழா வேலணை மேற்கு தலைகாட்டி ஐக்கிய நாணயசங்க மண்டபத்தில் திரு எஸ். பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.


LONDON
EXAMS IN NORTH
May - June - 1987

I. C. M. A. (New Syllabus)

STAGE - I 6-12-86

| | | |
|---|---|---|
| Economics | — | S. Thilakakumar |
| Quantitative Methods | — | R. Suresh |
| Business Law | — | K. Kanagamanokaran |
| Accounts | — | D. Gnanaseelan |
| Costing | — | R. Suresh |

STAGE - II 6-12-86

| | | |
|---|---|---|
| Information Technology Management | — | K. Kamalakumar |
| Management | — | R. N. Varendran |
| Financial Accounting | — | S. Thilakakumar |
| Costing | — | R. Suresh |

AND

A. A. T. I. D. P. M.

Prelim, Inter, Finals } 6-12-86 Part - I, Part - II } 14-12-86

CHOOSE THE BEST IN NORTH

AT:

North Ceylon Technical Institute,
14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tele; 24355 [A-3215]


## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பழை கிழக்கு 1. கந்தையா விசுவநாதனும்
2. பெண் சின்னத்தங்கமும்
வழக்காளிகள்

இல. ஈடு / 6370

எதிராக

தெல்லிப்பழை, பன்னாலை, நவக்கிரி 1. நாகமுத்துமாரிமுத்துவும்
2. பெண் சாவித்திரியும்
எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டில் 6370 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னை விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1986 ஆம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 5ஆம் திகதி (05-12-86) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 23,625/-ம். இதில் ரூபாய் 14,000/-க்கு 11-10-85 திகதி தொடக்கம் 2-7-86 திகதி வரைக்கும் 100க்கு 55 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 5337-60 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை ''நவக்கிரி'' நிலப்பரப்பு (10) பத்து. இதில் கிழக்குப் புறமாக நிலப்பரப்பு (4) நாலு. இதற்கு எல்லை கிழக்கு காசியன் கணபதியின் ஆதனம். வடக்கு இவர் நமசிவாயத்திற்கும் நாராயணபிள்ளை இராசிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனமும் மேற்கு மிகுதி ஆதனம். தெற்கு சின்னத்துரை அன்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆசனம். இதடங்கலும் இன்னும் மேற்கு பேராமுங்கையிலிருந்து இக்காணியின் தெற்கெல்லைக் காணியின் தெற்கெல்லையருகாக ஆறுமுழ அகலப்பாதையும் இதன் தெற்கெல்லைக் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் உரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
9-10-1986. (C 6131)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



சதாசிவம் அன்னம்மா

பிறப்பு: 18-07-1906
இறப்பு: 29-11-1985
திதி: 03-12-1986

ஆலமரமாய் அனைவருக்கும் நிழலாய், அவனியில் பவனி வந்து, அவனடி நிழலைத்தேடி அமரருலகம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! உம் நினைவு என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

அன்புடன் நினைவுகூரும்;
மகன், மகள்கள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரன், சகோதரிகள், உறவினர்கள். தெணிரோட், பருத்தித்துறை.
(C 6073)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



சுப்பையா சதாசிவம்

அன்னை மடியில்: 14-01-1914
இறைவனடியில்: 13-12-1985
திதி: 03-12-1986

எங்கள் அன்புத் தெய்வமே, இல்லத்தில் ஒளி விளக்காய் துலங்கி எம்மையெல்லாம் சிறப்பாக வழி நடத்தி வாழ வைத்துவிட்டு நீங்கள் மட்டும் திடீரென இறைவன் பாதம் அடைந்து இன்றுடன் ஓராண்டு சென்றாலும் உங்களை எங்களால் மறக்கமுடியவில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்!

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள், சகோதரி
30 B, விதானையார் வீதி,
சுண்டுக்குளி. (C 6129)

## இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி- 17 (3 - 12 - 1986)
கிழமை- புதன்
திதி- துதியை
நட்சேத்திரம்- மூலம்

மேடம்; பொருள் லாபமீட்டும் குடும்பத்திலும் குதூகலம் உண்டு புதிய நண்பர்கள் சேர்க்கையுமுண்டு.

இடபம்: ஏக்கத்தின் சாயல் நிழல் போலத் தொடரும் எதிரிகள் எக்காளமிடுவர். கல்வி மந்தநிலையும் உண்டாம்

மிதுனம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சியுண்டு. கடமையிலும் ஒளி வீசும் அமைதிக்கும் நலனுண்டு.

கடகம்; எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தையளிக்கும். உடல் நலம் பாதிக்கப்படலாம் எதையும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுத்தவும்

சிங்கம்; பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள் இதயத்தில் அமைதி நிலவும். காரியத்தில் வெற்றிக்கொடி ஏற்றுவீர்கள்.

கன்னி; மக்களால் மகிழ்ச்சியுண்டு மகிழ்வான செய்தியுமுண்டு; குடும்பத்திலும் இன்பம் சூழும்.

துலாம்; உறவினர் கொண்டாட்டம் உண்டு. சிலருக்கு தலைமைத் தானமும் கிடைக்கும். பிறர் ஆதரவும் தாராளமாகக் கிட்டும்.

விருச்சிகம்; சிலர் அவப்பெயருக்கும் ஆளாகலாம். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும் அதிலும் விரக்தி நிலை தோன்றும்.

தனுசு: வணிகர்கள் நஷ்டமடைவர். கொடுக்கல் வாங்கல் மூலம் பிரச்சனைகள் மேலோங்கும் முயற்சிகள் முறியடிக்கப்படும்

மகரம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். ஒளி வீசும் கருத்தினில் காதல் மோதும் சாரதிகள் மக்களின் ஆதரவைப் பெறுவர்.

கும்பம்: வீண் செலவுகள் ஏற்படும். அன்னியர் பகையும் தோன்றலாம். கடமையில் கவனம் செலுத்தவும்.

மீனம்: நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்களாவர். மாதுரு வழியாலும் சிறப்புக் குடமுண்டு தன தானிய விருத்தியுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## இராமநாதன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி) சைவ மகாஜன மகாவித்தியாலயம்), சு. குபேரன் (இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலை).

கீழ்ப்பிரிவு; விநோதினி சிவானந்தன் (இராமநாதன் கல்லூரி), அ. பாமினி (இணுவில் சைவமகாஜனவித்தியாலயம்), செ. தவச்சந்திரன் (இணுவில் சைவமகா ஜன மகாவித்தியாலயம்), க. சசிகுமாரன் (இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. மகாலிங்கம் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



நாகமுத்து
சிவப்பிரகாசம்
(முன்னாள் பங்காளர், கெக்கிராவ P சுப்பிரமணியம் சகோதரர்)
(தற்போது அம்டாள் மில் உரிமையாளர், சண்டிலிப்பாய்)

தோற்றம்; 5- 2- 1918
மறைவு: 3- 11- 1986

மண்ணிலே வளமாய் வாழ்ந்து, இறைபக்தியில் தளராது இருந்து, அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து, பலர் வாழ்வுக்கும் வழிகாட்டியாய் இருந்து உற்றார், உறவினர் உள்ளத்தில் நிலையாய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்து சென்ற தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். 3- 11- 86 அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய அழைப்பிலும். மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, தம்பிமார்,
தங்கைமார்,
மைத்துனர்கள்.
சீரணிநாகம்மாள்
கோவிலடி,
சண்டிலிப்பாய்
(C 6058)

## பிள்ளையார் கதை

யாழ்ப்பாணம், புதன் ஆனைக்கோட்டை, உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் தினமும் பிள்ளையார் கதைப்படிப்பும், விஷேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை கஜமுகாசுர சம்ஹாரமும், பிராயச்சித்த அபிஷேகம், லிங்கபூசையும் நடைபெறவுள்ளது.

## யாருடையது?

பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒரு அன்பர் யாழ். மானிப்பாய் வீதியில் ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பணபார்சல் ஒன்றை கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் தகுந்த அத்தாட்சியைக்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கணக்கறிக்கை

சாவகச்சேரி, செவ்:

சாவகச்சேரி மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கான மாதாந்த கணக்கறிக்கையை இம்மாதம்முதல் வாடிக்கையாளரிடம் நேரிலேயே வங்கியில் வழங்கிவருகின்றனர்.


COMSAT COMMUNICATIONS International Telephone Telex Service
உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி சேவை
கொம்சட்கொமினிகேஷன்
இல. 79/1, பருத்தித்துறை வீதி, (மேல்மாடிக் கட்டடம்)
(டாக்டர் G. குமரேந்திரன் மெடிக்கல் கிளினிக் அருகாமை) கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
★ இரவு பகல் 24 மணி நேர சேவை ★
(A 2835)

உலக தமிழ் பண்பாட்டு இயக்க

# சர்வதேச பேராளர் மகாநாடு மலேசியாவில் நடைபெறும்

வேலணை, செவ்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச பேராளர் மாநாடு 87ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி முதல் 24ம் திகதிவரை நான்கு தினங்களுக்கு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கின்றது

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் இரா. நா. வீரப்பன் தலைமையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டிற்கு சிங்கப்பூர், லண்டன், பர்மா, இந்தோனேசியா, பீஜி, தென்னாபிரிக்கா மொரீசியஸ், இறியூனியன், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தும் மற்றும் உலக நாடுகளில் உள்ள ஐம்பத்தைந்து கிளைகளிலிருந்தும் இம் மகாநாட்டிற்கு பேராளர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இம் மாநாட்டின் முதல் மாநாடு சென்னை நகாிலும் 2வது மாநாடு மொரீசியஸ் சிலும் 3வது மாநாடு தமிழ் நாட்டைச் சேர்ந்த சேலம் மாநிலத்திலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த அணிவகுப்பு

பண்டத்தரிப்பு, செவ்.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் வட பிரதேசத்தின் வருடாந்த அணி வகுப்பும், பிரிட்டிஷ் மகாராணி வழங்கிய சின்னம் சூட்டுவிழாவும் இம் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமையன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## கூட்டுறவுச்சங்க போசனசாலை

பருத்தித்துறை செவ்.

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மந்திகையில் போசனசாலை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. இப் போசனசாலைத் திறப்பு விழாவிற்குப் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைத் தலைவர் திரு. எஸ் நடராஜா தலைமைதாங்க பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை வேலும் மயிலும் போசனசாலையைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

# விசாரணைக்கு முயன்றபோது நஞ்சருந்தி இளைஞர் தற்கொலை

உடுவில், செவ்

சட்டபூர்வமான மனைவி இருக்கக் கூடியதாக இளம் பெண்ணொருவரை கூட்டிச் சென்றமைக்காக இப்பகுதியிலுள்ள இளைஞர் ஒருவரை சமாதான சபையினர் விசாரணை செய்ய முயன்றபோது மேற்படி இளைஞர் நச்சு திராவகம் அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

உடுவில் மல்வம் என்ற இடத்தில் வசிக்கும் கணபதி மருதன் மோகன்ராஜ் (வயது 26) என்ற நபரே தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

இவரது மரண விசாரணைகளுக்கான ஏற்பாடுகளை உடுவில் பிரிவு கிராம சேவையாளர் திரு. எஸ். ஆறுமுகம் ஒழுங்கு செய்தார் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு என். தம்பிராசா மரண விசாரணையை நடாத்தினார்

காலஞ்சென்றவரின் மனைவி திருமதி ராஜேஸ்வரி மோகன்ராஜ் தந்தை கணபதி மருதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்

மேற்படி சம்பவம் பற்றி விசாரணையில் சாட்சிகள் தெரிவித்ததாவது: காலஞ்சென்றவர் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கோப்பாய் சின்னப்பு ராஜேஸ்வரியை திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு ஐந்து வயது நிரம்பிய ஆண்பிள்ளை ஒன்று உள்ளது காலஞ்சென்றவர் வேறொரு இளம் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தமை காரணமாக ஏற்பட்ட மன முறிவினால் தமது மனைவியை பிரிந்து உடுவிலில் வாழ்ந்தார். இக்காலத்தில் இவர் அந்த இளம் பெண்ணை கூட்டிச் சென்று மணம் செய்ய முயன்றதை அறிந்து அதை தடைசெய்ய முயன்றபோதே மேற்படி நபர் நச்சு திராவகம் அருந்தி மரணமானார். விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

# University of Jaffna, Sri Lanka.

## REGISTRATION OF SUPPLIERS AND CONTRACTORS — 1987.

Applications are invited from reputed Suppliers / Manufacturers / Local Agents / Contractors who wish to register themselves for the undermentioned Supplies and Services, up to 19th December, 1986.

### SUPPLIES

01. Stationery, Rubber Stamps and Date Stamps.
02. Books, Magazines and other Publications.
03. Office Furniture.
04. Office Equipment (Steel Almirahs, Cabinets, etc.)
05. Office Machines (Typewriters, Calculators, Duplicating Machines, etc.)
06. All Types of Hardware, Paints, Varnish.
07. Machinery. Tools and spares.
08. Electrical Equipment and spare parts.
09. Kitchen Utensils including Cutlery and Crockery.
10. Textiles, Window Curtains, etc.
11. Sanitaryware
12. Laboratory Epuipment, Chemicals and Glassware.
13. Timber
14. Building Materials (Sand, Bricks, Tiles, Metal, Lime etc)
15. Brooms Ekel Brooms, Door-Mats, etc.
16. Tyres Tubes and Batteries.
17. Motor spares and accessories.
18. Ayurvedic Drugs
19. Drugs and Medical Supplies.
20. Sports and Welfare goods.
21. Fire Extinguishing Equipment and Safety Equipment
22. Uniform Materials, Rain Coats, Gum Boots, Umbrellas and Shoes etc
23. Book-binding Materials.
24. Pipes and pipe fittings of every type.
25. Plastic and Fibre Glass products.
26. Ceramics and Glassware.
27. Fertilizer, Chemicals and Tools for gardening.
28. Printing paper and materials required for off-set printing
29. Electronic Components.
30. Equipment and other materials required for Litho artists
31. Dark-Room Equipment and Chemicals for process Camera
32. Spare parts for plate Maker, Plates. Chemicals and other Equipment.

### SERVICES

01. Printing and Block making.
02. Repairs to Office Machines and Equipment (Typewriters, Calculators, etc)
03. Repair and Maintenance of Refrigerators, Air Conditioners
04. Repairs to Steel Furniture.
05. Rattaning and Repairs to Chairs.
06. Tailoring of Garments and Door and Window Curtains
07. Drawing of Name-Boards and making of Plastic Name-Boards.
08. Laundering.
09. Binding of Books and periodicals.
10. Running of Canteens and Catering Services.
11. Clearing of Imported Goods.
12. Cleaning of Offices.
13. Transport Services.

### ENGINEERING SERVICES

01. Repairs to Motor Vehicles.
02. Repairs to electric motors and Electric equipment.
03. Civil Engineering works including the construction and repairs to buildings and roads.
04. Electrical wiring installation and maintenance of electrical equipment
05. Installation and repairs to Water Supply and Sanitary
06. Fabrication and installation of iron grills and gate.
07. Consultants for Building Services.
08. Supply and fixing movable and fixed timber furniture.

All applications should be submitted under registered cover marked "Supplies / Services - 1987" on the left hand corner of the envelope as follows:

01. Application for supplies and services addressed to Bursar University of Jaffna, Jaffna.
02. Application for Engineering Services addressed to Works Engineer, University of Jaffna, Jaffna

Separate applications should be sent for each supply / service. Each application should accompany a Postal Order to the value of Rs 100.00 drawn in favour of "UNIVERSITY OF JAFFNA" as registration fees.

Normally quotations are called for from the registered suppliers However, the University reserves the right to call for quotations from other sources as well in order to obtain quality goods at competitive prices.

Any supplier who fails to submit quotaions when called for or fail to supply items / services in time or in uniformity with the stipulated specifications will be struck off the register without prior notice

Every application should include the following information:-

I. Supply or Service applied for.
II. Name and Address.
III. Telephone Number.
IV. Number and date of the Business Registration.
V. Nature of Business.
VI. Names of Bankers.
VII. Credit facilities available.

### ADDITIONAL INFORMATION REQUIRED FOR ENGINEERING SERVICES.

VIII. Amount upto which registration is requested (item 3 only) state upto 500 000/-. (Submit copies of registration with other Goverment Department / Corporation / Board)
IX. Give the names and experience of all Engineers and Architects permanently emlpoyed at your Organisation (item 7 only)
X. Indicate the last three related jobs handled by you (Preferably with Government Department / Corporation / Boards) with total cost of the job done by you date of Completion for item 3, 4, 5, 7 and 8 only.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
JAFFNA.

(A-3171)

## இல்லச் சுடரொளியின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



கி. றொபேட் பங்கிறுஸ்

மலர்வு: 2-08-1949
மறைவு 03-12-1981

அன்பெனும்
ஒளிவிளக்கே!
எம் அருட்பெரும்
செல்வமே!
நகர்காவலர்
இலாகாதன்னில்
ஒன்பதாண்டு
சேவைதனை
பாரோர் புகழ
நேர்மையுடன் ஆற்றி
கண்ணுறங்கும்
காண்கையிலே
பொல்லாப்
புற்றுநோயால்
பீடித்துயிர் துறந்து
ஐந்தாண்டுகள்
சென்றதையா!
தித்திக்கும்
தேன்குரலால்
அருந்துயரிலாழ்த்தி
மீளாத்துயில்
கொண்டனையோ!
இச்செய்தி கண்ணுறும்
அனைவரும் இவரின்
ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டவும்.

இவரின் பிரிவால்
துயருறும்
பெற்றோர், சகோதரர்,
உற்றார், உறவினர்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. [C6141]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
3-12-86 புதன்கிழமை

## வவனியா விபத்து: தேவஞானத்திற்கு இரத்தம்தேவை

[வவனியா நிருபர்]

வவனியாவில் நடந்த மினிபஸ் விபத்தில் படுகாயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட தேவஞானம் [வட்டு—கல்நகர்] ஆபத்தான நிலையிலிருப்பதாகவும் அவருக்கு இரத்தம் தேவைப்படுவதாகவும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியிலிருந்து வவனியா ஆஸ்பத்திரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

# பத்திரிகையாளர், பௌத்த குருமார் மற்றும் சிப்பாய்களின் பெற்றோருடன் 'விஜே' நாளை யாழ். வருகை

[வவனியா நிருபர்]

சிறிலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜயகுமாரணதுங்காவும், மற்றும் 30 பௌத்தபிக்குகளும், 15 உள்ளூர், வெளியூர்ப் பத்திரிகையாளர்களும் புலிகளால் அடம்பனில் கைதுசெய்யப்பட்ட இரு சிப்பாய்களின் உறவினர்கள் உட்படச் சுமார் 60 பேர் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இக்குழுவினர் இன்று காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு மாலையில் அநுராதபுரத்தை வந்தடைவர்.

இரவு அநுராதபுரத்தில் தங்கும் இக்குழுவினர் நாளைக்காலை வவனியாவுக்கு வருவார்கள்.

வவனியா பௌத்தவிகாரையின் பிரதம குருவும், வன்னிப் பகுதிச் சமாதானக் குழுத் தலைவருமான சிடாப்பல ஹஸ்பவ விமலதார தேரோவும் இக்குழுவில் கலந்துகொண்டு யாழ்ப்பாணம் வருவார்.

இக்குழுவில் விஜயகுமாரணதுங்காவின் மனைவி சந்திரிகாவும், திரு. ஒஸி அபயகுணசேகரா ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

அநுராதபுரத்திலிருந்து தனியார் பஸ் மூலம் வவனியா ஊடாக யாழ் வரும் இக்குழுவினர் ஓமந்தை பிள்ளையார் கோவிலில் இடம்பெறும் விசேட பூசையில் பங்குபற்றுவார்கள்.

இதன்பின் சனசராயல்குளம் பாடசாலையில் இடம்பெறும் கூட்டமொன்றில் இக்குழுவினர் பங்குபற்றுவர். திரு. விஜயகுமாரணதுங்கா இக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

நாளை யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் அடம்பனில் கைதுசெய்யப்பட்ட இரு சிப்பாய்களை மீட்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி கிட்டுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். [ஒ]

## டிக்ஸிற் சந்திப்பு

கொழும்பு, செவ்

இந்தியத்தூதர் திரு ஜே. என். டிக்ஸிற், தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியை நேற்றிரவும், நிதியமைச்சர் ரொனி டி மெல்லை இன்றும் சந்தித்தார்.

இலங்கையரசின் புதிய பிரேரணைகள் பற்றிய இந்தியாவின் பூர்வாங்க கருத்தை இலங்கை அமைச்சர்களுக்கு தெரிவிக்கும்படி இந்திய அரசுபணித்ததன் பேரிலேயே டிக்ஸிற் இவர்களைச் சந்தித்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை பிரதமர் பிரேமதாஸவையும், வெளியுறவு அமைச்சர் ஹமீட்டையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. [ஊ]

## மரண அறிவித்தல்

### கதிரவேலு திருநாவுக்கரசு

திருநாவுக்கரசு அகால மரணமானார். அன்னார் கதிரவேலு தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் கனிஸ்ட புதல்வரும், அன்னலக்சுமியின் அன்புக்கணவரும், கனகரட்ணம் (ஒமான்) தருமரெட்ணம், தவரெட்ணம் (சவுதி), பாமினிதேவி தவமணிதேவி அரசரெட்ணம் [ஜேர்மனி] ஈஸ்வரானந்தா (சவுதி), யசோதராதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மாவதி, நகேஸ்வரி, யோகராணி தர்மலிங்கம், செல்வதி (ஜேர்மனி), சச்சிதானந்தசிவம் Uinted Speing and Weaving - Ja - ela] ஆகியோரின் மாமனருமாவார் அன்னாரின் பூதவுடல் [இன்று புதன்கிழமை 03 - 12 - 86] பிற்பகல் ஒரு மணிக்கு 94, அம்பலவாணர் வீதி, அத்தியடியில் இருந்து தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தகவல்: மனைவி, மக்கள். C-6150

### செல்லர் இரத்தினசபாபதி

(முன்னைநாள் விக்ரோறியாக் கல்லூரி இசை ஆசிரியர்)


கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஊரெழு மேற்கை வசிப்பிடமாக கொண்டவருமான செல்லர் இரத்தினசபாபதி 2-12-86 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கிருபாகரன் [கிரி], (யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்களம்), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நிர்மலாதேவியின் மாமனாரும், சிவசாந்தி, சிவசங்கர், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 3-12 86 (இன்று) புதன்கிழமை 11 மணியளவில் பொக்கணை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ கிருபாகரன்,
கண்ணகை அம்மன் கோவிலடி,
ஊரெழு மேற்கு.

[C-6151]

### கதிரவேலு சுப்பிரமணியம்

[உரிமையாளர் இராசம் மோட்டேர்ஸ்]



கதிரவேலு சுப்பிரமணியம் 1-12-86 அன்று மதுரையில் காலமானார் இவர் கதிரவேலு இராசம்மா அவர்களின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பிரபாஸ்கரன், பிறேமரஞ்சினி [யாழ் பல்கலைக்கழகம் B Com] பவானி, [இந்து மகளிர் கல்லூரி] ஜெயகௌரி, சரவணபவன் [St. Paticks] ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா, கனகரட்ணம், நவரட்ணம், தங்கமணி, ஈஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுபத்திரை, கோதாவரி, பராசக்தி, ஆகியோரின் அருமைச் சகோதரரும், உதயகுமார் (இராசம் மோட்டேர்ஸ்) அவரின் மாமனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் [2 12-86] அன்று மதுரையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

பிரிவுத் துயரால் வருந்தும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

No: 12, கந்தபுராண ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[C6148]

## ஈழம் முத்திரைகளை இராணுவத்தினர் பணம் கொடுத்து வாங்கினர்கள்

மாவிட்டபுரம், செவ்

பலாலியிலிருந்து காங்கேசன்துறையைநோக்கி ரோந்து சென்ற இராணுவத்தினர் காங்கேசன்துறை கடைகளிலிருந்து ஈழம் தபால் முத்திரைகளை பணம்கொடுத்து வாங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அவ்வழியால் தபால் விநியோகம் செய்துகொண்டு ஊழியர் ஒருவர் வரவே அவர் வசமிருந்த தபால் பொதியை கைப்பற்றிக்கொண்டு அவரையும் காங்கேசன்துறை இராணுவ முகாமிற்கு கைதுசெய்துகொண்டு சென்றனர்.

அங்கு ஈழம் தபால் முத்திரைகளை அகற்றியபின் தபால் பொதியை ஊழியரிடம் ஒப்படைத்து அவரையும் விடுதலை செய்தனர். [ஒ]

## தீவுப்பகுதிகளில் தீவிரமான ரோந்து நடவடிக்கை

வேலணை, செவ்

கடந்த சில தினங்களாக தீவுப்பகுதியின் கடற்கரைப் பகுதிகளில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் பொம்பர், சீ-பிளேன், ஹெலிகொப்டர், பயணிகள் விமானம் என்பனவும் காலையிலும் மாலையிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வித ரோந்து நடவடிக்கைகளைத் தொடர்ந்து இப்பகுதியில் உள்ள மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இப்பகுதி கடற்றொழிலாளர்களும் இந் நடவடிக்கைகளினால் கடலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர். [ஒ]

## பீரங்கித் தாக்குதல்

வேலணை, செவ்

கடந்த சிலவார இடைவெளிக்குப்பின் காரைநகர் கடற்படையினர் கடல் பீரங்கிப்படகிலிருந்து ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்,

மாலை நேரமானதும் இந்த பீரங்கித்தாக்குதல்களை சில நிமிடத்துக்கு தொடர்ந்து தீர்த்துவருகின்றனர். [ஒ]

## சைக்கிள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், புதன்

அனாதரவான நிலையில் துவிச்சக்கரவண்டியொன்று கண்டெடுக்கப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தமிழீழ ராணுவம் அறிவித்துள்ளது. வண்டிக்கு உரியவர்கள் தக்கசான்றுகளைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

## மலைநாட்டுக்கு தமிழீழ முத்திரை எப்படி வந்தது! — பத்தேகம எம். பி.

கொழும்பு, செவ்வாய்

"மலைநாட்டுக்குத் தமிழீழ முத்திரை எப்படி வந்துள்ளது; அவற்றை அங்கு விநியோகிப்பவர்கள் யார்? இது பற்றித்தபால் உயர் அதிகாரிகளுக்கு மட்டுமன்றி அமைச்சரும் விரிவாக ஆராய வேண்டும்" இவ்வாறு நேற்றுப் பாராளுமன்றத்தில் தபால் தொலைதொடர்பு அமைச்சின் நிதிஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் பேசிய பத்தேகம எம். பி. அமரசிறி பிரஸ்தாபித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர் மேலும் கூறியதாவது

வடக்குக் கிழக்குப்பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் ஏற்கெனவே தபால் திணைக்களத்தின் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்போது அங்கு தமிழீழ முத்திரை விநியோகம் ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாகத்தபால் திணைக்களத்தின் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் ஈழமுத்திரைகள் புழக்கத்தில் உள்ளன. தபால்கள் இந்த முத்திரைகள் ஒட்டப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. [கூ-மே]

## பஞ்சாப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள் பின்போடப்பட்டிருந்தாலும் புதுடில்லியிலும், சென்னையிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடாத்தப்படுமெனவும் டிக்ஸிற் ஜனாதிபதியிடம் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசுஇறுதியாக சமர்ப்பித்தயோசனைகளின் அடிப்படையிலேயே இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுமென தெரியவருகிறது.

இதேவேளைபின்போடப்பட்டுள்ள சிதம்பரம் குழுவினரின் விஜயம் இம்மாத இறுதியில் நடைபெறுமென டிக்ஸிற் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். [ஊ]

## தொண்டமனாற்றில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி

வளலாய் 'பாப்பீச்' ஹோட்டல் முன் தமிழீழ விடுதலைப் புலிகள் 'கனன்சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டனர்

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

நேற்று மாலை 4-45 மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றது.

இரண்டு ஜீப்வண்டிகளிலும் இரு ட்ரக்குகளிலும் அரசபடையினர் ரோந்து சென்றனர். இத்தாக்குதலையடுத்தும் இராணுவத்தினர் தொடர்ந்து தொண்டமனாறு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்

தொண்டமனாறு இராணுவ முகாமிற்கு அருகாமையில் நீர்த்தொட்டி என்ற இடத்தில் மீண்டும் புலிகள் மாலை 5-30 மணியளவில் 'கனன் சார்ஜ்' தாக்குதலை மேற்கொண்டனர் இதில் பலர் காயமடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

## பண்ணையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகியதாக இவ்வியக்கம் அறிவித்துள்ளது.

இரு பகுதியினரிடையேயும் இடம்பெற்ற ஷெல், துப்பாக்கிச்சமரின் போது சில ராணுவத்தினர் பலியாகி அல்லது காயமடைந்திருக்கலாம் எனவும், தமதுதரப்பில் எதுவித சேதமுமில்லையெனவும் இவ்வியக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## புதுடில்லி செல்வர்

கொழும்பு, டிச 2

இலங்கை அரசு இறுதியாக சமர்பித்த பிரேரணைகள் தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காதமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களும், தமிழ்ப்போராளிகளும் இன்னும் ஓரிருதினங்களில் புதுடில்லி அழைக்கப்படுவர் என உத்திபோகபூர்வ வட்டாரங்களை ஆதாரங்காட்டி ரூபவாஹினி அறிவித்துள்ளது. (ஊ